Dinamani 16/08/2024

ணைப்பாளர் ஆர்.அண்ணாதுரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி:** கோவை நவ இந்தியா ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி சார்பில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரியின் முதல்வரும், செயலருமான பி.எல்.சிவகுமார் தலைமை வகித்தார். மாணவர் பேரவைத் தலைவர் சித்தார்த் எஸ்.கோபால் வரவேற்றார்.

விழாவில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எம்.பி.திவ்யா சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று தேசியக்கொடியை ஏற்றி வைத்துப் பேசினார். நிகழ்ச்சியில், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம், பேண்டு வாத்தியக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு சிறந்த மாணவத் தொண்டருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பேரவைச் செயலர் எஸ்.மானஸா நன்றி கூறினார்.

**அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்:** கோவை அவினாசிலிங்கம் மனையியல், மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில், பல்கலைக்கழக வேந்தர் தி.ச.க.மீனாட்சி சுந்தரம் தேசியக் கொடியேற்றிவைத்து மரியாதை செலுத்தினார். துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர் சுதந்திர தின வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட நீதிபதி ஜெ.வே.ராஜ் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில், கைத்தறி ஆடைகளை ஊக்குவிக்கும்விதமாக மாணவிகள் கைத்தறியுடன் தற்படம் எடுத்துக் கொண்டனர்.

**ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரி:** கோவை, ஆவாரம்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை, அறிவியல் கல்லூரி சார்பில் நடைபெற்ற விழாவில், தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் டெல்டா ஸ்குவாட் கமாண்டர் லெப்டினென்ட் ஈசன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று தேசியக் கொடியேற்றினார்.

கல்லூரி முதல்வர் கி.சித்ரா தலைமை வகித்தார். விழாவில், தேசிய மாணவர் படை மாணவிகளின் அணிவகுப்பு, விளையாட்டுப் பிரிவு மாணவிகளின் சார்பில் சிலம்பம், நாட்டு நலப் பணித் திட்ட மாணவிகளின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவுகூறும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**ஸ்ரீ நாராயண குரு கல்லூரி:** க.க.சாவடியில் உள்ள ஸ்ரீ நாராயண குரு கல்லூரியில் நடைபெற்ற விழாவில், கல்வி அறக்கட்டளை